# பெருந்திணை விளக்கம்

சு.காமாட்சி
*இளங்கலை ஆய்வாளர் தமிழ்த்துறை*
*பதிவு எண்:16A3TA7P01*
*தொழிற் கல்வி ஆசிரியை, அரசு மேல்நிலைப்பள்ளி, தேவிப்பட்டினம்*

முனைவர் திருமதி.ம.உமாமகேசு
*தமிழ்த்துறை பேராசிரியர்*
*பிரிஸ்ட் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*

முன்னுரை

தமிழ் இலக்கிய மரபு காலந்தோறும் சமூக இயல்புகளுக்கேற்ப மாறி வந்துள்ளது. சங்ககாலத்தில் இயற்கையோடு இயைந்த சமூக வாழ்க்கைப் பின்புலத்தில் இலக்கியம் படைக்கப்பட்டுள்ளது. அப்படைப்பாக்க இயல்புகளும்நெறிமுறைகளும் தொல்காப்பிய இலக்கணமாக உருவாகின. சங்ககாலத்துப் படைப்பு பொருளாக அகமும் புறமும் போற்றப்பட்டுள்ளன. மக்களின் ஒழுக்க அடிப்படையிலும் வாழும் இடத்தின் அடிப்படையிலும் திணைக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் புறத்திணையும் அகத்திணையும் ஏழு திணைகளாகப் பகுக்கப் பட்டுள்ளன. ஈறாக ஏழு திணைகள் காட்டப்பட்டுள்ளன.

இத்தகைய பாகுபாட்டிற்கு மாறாகச் சங்க இலக்கியத் துறைக்குறிப்புகள் கைக்கிளை பெருந்திணையைப் புறக்கணித்து எழுதப்பட்டுள்ளன. காலத்தை எடுத்துக்காட்டும் இலக்கியத்திற்குக் காலம் கடந்து எழுதப் பட்ட துறைக்குறிப்புகள் முரண்பட்டு நிற்பது அறியத்தக்கது.

பிற்காலச் சமூக மாறுபாட்டிற்கேற்க கைக்கிளை, பெருந்திணை இரண்டையும் அகத்திணையாகக் கொள்வதற்கு மனம் இடம் தராது. அகக்குறிப்பமைந்த சங்கப்பாடல் களுக்கு ஐந்திணையுள் ஒன்றாக அடக்கிக் காட்டினர்.

இப்போக்குத் தொல்காப்பியத்தையும் சங்க இலக்கியத்தையும் சரியாகப் புரிந்து கொள்ளாத நிலையில் உருவானதாகவே கொள்ள வேண்டியுள்ளது. எனவே கைக்கிளைபெருந்திணை இரண்டனுள் பெருந்திணைக்குறிப்பமைந்த எட்டுத்தொகை அகப்பாடல் களை அடையாளம் கண்டு விளக்குவது ஆய்வுலகிற்குத் தேவையாக உள்ளது.

மேற்கருத்தின் அடிப்படையில் பெருந்திணைக்குக் காலத்திற்கேற்ப விளக்கம் தருவது அவசியம் என்பதனால் இவ்வாய்வு பெருந்திணையை விளக்கும் வகையில் அமைகிறது.

பெருந்திணை

நம்முன்னோர் ஆண், பெண் என்னும் இருபாலரில் ஒருபாலர் மறுபாலர் உள்ளத்தாலும், உடலாலும் கொள்ளும் வேட்கையைக் காமம் எனப் பெயரிட்டு அழைத்தனர். அவர்கள் காமத்தை அதன் இயல்பு நோக்கிக் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என மூவகையினதாகப் பகுத்தனர். இருவர் மட்டும் ஒத்த வேட்கை அமையப் பெறுமாயின் அது அன்புடைக் காமம் எனப் போற்றப்படும். அது நிகழும் இடத்தைப் பொறுத்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகைப்படும்.

ஐந்திணையுடையது அன்புடைக் காமம் ஆகும். இருவர்க்கும் ஒரே நேரத்தே ஒருவர் மீது ஒருவருக்குக் காமம் அமைதலின் இது அன்புக்குறைபாடற்ற முழுமையான ஓர் ஒழுக்கமாகும் இத்தகைய அன்புடைய தலைமக்கள் இருவருள் ஒருவரின் உணர்வு மிக்க தன்மையாக அமைந்த பெருந்திணை யை ஆய்வதே இவ்வியலின் நோக்கமாகும்.

பெருந்திணை என்பதற்குத் தொல்காப்பியரும், சங்ககாலப் புலவர்களும் அன்புடைய இருவரில் ஒருவரின் உணர்வுமிக்க தன்மை எனக் கூறியுள்ளனர். ஆனால் அவர்களுக்குப் பின்னெழுந்த உரையாசிரியர்கள், தலைவன் தலைவியைப் பொருந்தா முறையில் காமுறுவதும் தலைவி தலைவனைப் பொருந்தா முறையிற் காமுறுவதும் எனக் கூறியுள்ளனர்.

“பெருந்திணை என்பதற்கு நம்பியகப்பொருள் பொருந்தாக்காமம் என உரை கூறுகிறது”. ஒருவன் ஒருத்தியிடம் மிகுதியாகக் காமம் கொள்ளுதல், அவளை அடைய பெறாது மடலேறுதல், தனக்கு இளைய பருவத் தாளைக் கூடி நுகர்தல்பெருந்திணையாகும். அவ்வாறின்றி மூப்பு உடைய பருவத்தாளைக் கூடுதல் நெறியாகும். அவ்வாறின்றி இருக்கும் காமம் நுகர்தல், தேறுதல் அடையாது அறிவழிக்கும் மிகுதியான காமம் கொள்ளுதல், கரை கடந்த காமத்தால் விரும்பாதவரை வலிதிற் புணர்தல் எனப் பல்வேறு வகையில் பொருள் கூறி வந்துள்ளனர்.

"ஐந்திணை என்பது ஒத்த அன்பால் உண்டாகும் இன்ப ஒழுக்கங்கள் எனவும், கைக்கிளையாவது ஒருபக்க அன்பால் உண்டாகும் தாழ்ந்த இன்ப ஒழுக்கம் எனவும், பெருந்திணை என்பது ஏற்றத்தாழ்வான இருபக்க அன்பால் உண்டாகும் மற்றொரு வகையான தாழ்ந்த இன்பவொழுக்கம் எனவும் அறிஞ் இளவழகனார்"கூறிய கருத்து பொருத்தமற்றதாகும்.

"பெருந்திணையில் எவ்வகையானும் வலிந்த காமத்துக்கு இடமில்லை என்பதும், உள்ளப்புணர்ச்சி என்னும் அகத்திணைப் பண்பிற்கு ஒத்ததுவே பெருந்திணை என்பதும், தொல்காப்பியரும், சங்கப் புலவர்களும் பெருந்திணையை அன்புக்காமமாகவே வகுத்துப்பாடியுள்ளனர் என்பதும் அறிஞர் வ.சுப. மாணிக்கனாரின் கருத்தாகும்"
இளவழகனார் கூறியுள்ளது போன்று பெருந்திணையைத் தாழ்ந்த இன்பவொழுக்கம் என்று கூறுவது பொருத்தமற்றதாகும்.

அன்பின் ஐந்திணை பல துறைகளைக் கொண்டது. ஆனால் பெருந்திணை மிகச் சில துறைகளை உடையது. அதனை வரிவாக்க இயலாது. இதனைத் தொல்காப்பியர் "செப்பிய நான்கே"எனக் குறிப்பிட்டு விரிவுக்கு இடமின்மையையும் தெளிவுறுத்துகிறார்"

தலைவன் தலைவியர் சில காதல்களை உள்ளத்தளவிலும், சொல்லளவிலும் காத்துக் கொள்ளும் போது, அக்காதற் பாங்குகள் ஐந்திணையின் பாற்படுகின்றன.

அவ்வளவுகளுள் அடங்காத சிலர் காதல் மிகுவார். மிகுதியால் சில காதல்செயல்களை மேற் கொள்வர். அதனால் ஊரறியும் நிலைமை ஏற்படும். இக்காதல் மிகைகளே பெருந்திணை பொருள்களாகின்றன. ஐந்திணை என்பது அளவான காதல், பெருந்திணையாவது மிகுதியான காதல், பெருந்திணை என்பதில் "பெரும்"என்பது பண்படை, இப்பண்படை அளவிலும் மிகுதிப்பாட்டை அதிகமான அளவைக் குறிக்கின்றது.

பெருந்திணை – ஒரு நுட்ப விளக்கும்

பெருந்திணை என்பது இருபாலும் அன்புடையார் மாட்டு நிகழ்வதாகும். காதலின்பச் செயல்களுக்கும், உடற்புணர்ச்சிக்கும் காலம், இடம், அகவை, பருவம் ஆகியவை உண்டு. இந்த எல்லைகளைத் தாண்டி பின்பு காதலர்க்குள் காதல் வராது. ஆயினும் உடலின்ப விளையாட்டுக்கள் மறையும். மணத்தான் முதிர்ந்த அன்பு இருவரிடையே அமைந்து இல்லறத் தோணியைச் செலுத்தும் வயது முதிர்ந்த நிலையில் காதல் இருக்காதா? இருக்கும். அது கோடைக்காலத்தில் ஆற்றுநீர் மணலடிற் கிடப்பது போல உள்ளத்தின் அடியில் இருக்கும்

குடும்பக் கடமையில் ஆழ்ந்து வழிமுறைகளைப் பேணும் செயல்களிலும் முதியோர் ஈடுபடுகின்றனர். கணவன் மனைவியிடையேயான பாலுறவு நீங்கி அன்பும் அருளும் கனிந்து ஒரு பேருணர்வு அவர்களை ஆட்கொள்ளும் பயனில் மூப்பாகக் கழியா, அக்காலத்தை முன்னாளில் வாழ்ந்த தம் வாழ்க்கைப் பேறுகளை உள்ளம் எண்ணி அசைபோடும். எனினும் அவற்றை வெளிப்படக் கிளத்துதல் இல்லை.

தம் சிறுபருவ நிகழ்ச்சியெல்லாம் நினைவுகூரும் முதியவர் தாமும் தம் மனைவியும் இன்பத்துறையில் களித்தயர்ந்த நிலைகளைக் கூறுவது இல்லை. நினைவுகள் உள்ளத்திரையில் ஒட்டிக்கொள்ளும் எனினும் அவற்றை உரைக்குமாறு அகத்திணை நாகரிகம் அனுமதிக்கவில்லை.

முடிவுரை

1. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ்ச்சான்றோர்கள் காமம் சார்ந்த மிகை ஒழுக்கங்களையே பெருந்திணை எனக் கொண்டனர் என்பதை காணமுடிகிறது.
2. தூய்மையுடன் பேணப்பட வேண்டிய மானிடக்காதல் சான்றோர் வகுத்த சமுதாயக் கட்டுப் பாடுகளைக் கடக்குங்கால் அவை பெருந்திணைக்குள் சேர்கின்றன என்பதைப் புலவர் பெருமக்கள் படைத்துள்ள பாடல்கள் எடுத்துக்காட்டு கின்றன.
3. உடலினால் மட்டுமின்றி, உள்ளதாலும், வாக்காலும் தவறிழைப்போர் கூட பெருந்திணைக் குள் அடக்கப்படும் போக்கு, பின்னாள் தமிழ் மரபாகக் கைக் கொண்டிருந்தது என அறியமுடிகிறது
4. அன்புடைய இருவரில் ஒருவரின் உணர்வு மிக்க தன்மையால் ஐந்திணை பெருந்திணையாக மாறுகிறது.